# கூடலூர் நகராட்சி (நீலகிரி)

## நகர் மன்ற சாதாரண கூட்டம்

**28.11.2024-ம் நாள் வியாழன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும் இந்நகராட்சியின் நகர் மன்ற சாதாரண கூட்டத்தின் பொருட்கள்**

| | | |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அலுவலக பணிக்காக Closed User Group (CUG) சிம்கார்டு வழங்கப்பட்டுள்ளது. சிம்கார்டுகளுக்கு புதிய அலைபேசி தேவைப்படுவதால் அலைபேசியினை வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.25,000/- ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு - அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். | 2626 அனுமதிக்கப்பட்டது |
| 2 | இந்நகராட்சி பணியாளர்களின் தினசரி வருகையினை பதிவு செய்வதற்காக இரண்டு எண்ணிக்கையிலான Bio Metric கருவியினை பொருத்துவதற்கு ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.30,000/- ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு - மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.** | 2627 அனுமதிக்கப்பட்டது |
| 3 | நிலமாற்றம் - நீலகிரி மாவட்டம், கூடலூர் நகராட்சிக்குட்பட்ட கூடலூர் கிராமம் 1, வட்டாட்சியர், கூடலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ3/568/2018 நாள்.04.10.2024 கடிதத்தின்படி, ஏழுமுறம் பகுதியில் உள்ள புதிய புல எண்.929/3 காலையானது, கிராம ஆவணங்களில் "அனாதீனம்" என்ற பதிவுக்கொண்டுள்ளது. இதன் பரப்பு 0.04.50 ஹெக்டர் பரப்பில் 0.01.22 ஏக்கர் நிலத்தில் அங்கன்வாடி மையக் கட்டிடம் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட துறைக்கு நிலமாற்றம் செய்ய பிரேரணைகள் எடுக்கப்பட்டு, இந்நகராட்சியின் மூலம் தீர்மானம் வழங்கும் பட்சத்தில், நிலமாற்றம் செய்ய இயலும் என்பதால் மேற்படி நகராட்சிக்கு தடை ஏதும் இல்லை என தீர்மானம் நிறைவேற்ற முன் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு - மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.** | 2628 அனுமதிக்கப்பட்டது |
| 4 | நிலமாற்றம் - நீலகிரி மாவட்டம், கூடலூர் நகராட்சிக்குட்பட்ட கூடலூர் கிராமம் 2, வட்டாட்சியர், கூடலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ3/1063/2024 நாள்.06.11.2024 கடிதத்தின்படி, வி.வி.என்.நகர் பகுதியில் உள்ள புல எண்.1098/4 காலையானது, கிராம ஆவணங்களில் "அனாதீனம்" என்ற பதிவுக்கொண்டுள்ளது. இதன் பரப்பு 0.20.00 ஹெக்டர் பரப்பில் 0.01.22 ஏக்கர் நிலத்தில் அங்கன்வாடி மையக் கட்டிடம் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட துறைக்கு நிலமாற்றம் செய்ய பிரேரணைகள் எடுக்கப்பட்டு, இந்நகராட்சியின் மூலம் தீர்மானம் வழங்கும் பட்சத்தில், நிலமாற்றம் செய்ய இயலும் என்பதால் மேற்படி நிலமாற்றம் செய்ய இந்நகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என தீர்மானம் நிறைவேற்ற முன் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதி வழங்கலாம்.** | 2629 அனுமதிக்கப்பட்டது |
| 5 | நிலமாற்றம் - நீலகிரி மாவட்டம், கூடலூர் நகராட்சிக்குட்பட்ட கூடலூர் கிராமம் 2, வட்டாட்சியர், கூடலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ3/1063/2024 நாள்.06.11.2024 கடிதத்தின்படி, கோழிப்பாலம் பகுதியில் புல எண்.160/5, 160/7 மற்றும் 160/8 ஆகிய காலைகளில் 8.25 ஏக்கர் கிராம ஆவணங்களில் "அனாதீனம்" என்ற பதிவுக்கொண்டுள்ளது. இதில் 8.25 ஏக்கர் நிலத்தில் பாரதியார் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க நிலமாற்றம் செய்ய பிரேரணைகள் எடுக்கப்பட்டு, இந்நகராட்சியின் மூலம் தீர்மானம் வழங்கும் பட்சத்தில், நிலமாற்றம் செய்ய இயலும் என்பதால் மேற்படி இந்நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என தீர்மானம் நிறைவேற்ற முன் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதி வழங்கலாம்.** | 2630 அனுமதிக்கப்பட்டது |
| 6 | நீலகிரி மாவட்டம், கூடலூர் நகராட்சிக்குட்பட்ட கூடலூர் கிராமம் 2, வட்டாட்சியர், கூடலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ3/3850/2019 நாள்.12.11.2024 கடிதத்தின்படி, நடு கூடலூர் பகுதியில் உள்ள புல எண்.1047/3 காலையானது, கிராம ஆவணங்களில் "அனாதீனம்" என்ற பதிவுக்கொண்டுள்ளது. இதன் பரப்பு 0.01.50 ஹெக்டர் பரப்பில் 0.01.22 ஏக்கர் நிலத்தில் அங்கன்வாடி மையக் கட்டிடம் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட துறைக்கு நிலமாற்றம் செய்ய பிரேரணைகள் எடுக்கப்பட்டு, இந்நகராட்சியின் மூலம் தீர்மானம் வழங்கும் பட்சத்தில், நிலமாற்றம் செய்ய இயலும் என்பதால் மேற்படி நிலமாற்றம் செய்ய இந்நகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என தீர்மானம் நிறைவேற்ற முன் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதி வழங்கலாம்.** | 2631 அனுமதிக்கப்பட்டது |

| | Subject<br>விஷயம் | Resolution<br>தீர்மானம் |
|---|---|---|
| 7 | நீலகிரி மாவட்டம், கூடலூர் நகராட்சிக்குட்பட்ட கூடலூர் கிராமம் 2, வட்டாட்சியர், கூடலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ3/2080/2024 நாள்.22.11.2024 கடிதத்தின்படி, ஓவேலி சாலையில் அரசு தகைசால் பள்ளி அருகில் புல எண்.1094 காலையானது. கிராம ஆவணங்களில் "சாலை" என்ற பதிவுக்கொண்டுள்ளது. இதன் பரப்பு 0.24.50 ஹெக்டர் பரப்பில் 0.00.21 ஏக்கர் நிலத்தில் சோதனைச் சாவடி மைய கட்டிடம் கட்டுவதற்கு வனத்துறைக்கு நிலமாற்றம் செய்ய பிரேரணைகள் எடுக்கப்பட்டு, இந்நகராட்சியின் மூலம் தீர்மானம் வழங்கும் பட்சத்தில், நிலமாற்றம் செய்ய இயலும் என்பதால் மேற்படி நிலமாற்றம் செய்ய இந்நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என தீர்மானம் நிறைவேற்ற முன் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2632 அனுமதிக்கப்பட்டது<br>20 வது வார்டு உறுப்பினர் எதிர்ப்பு தெரிவித்தார் |
| 8 | இந்நகராட்சியில் வெளிகொணர்வு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 8 தற்காலிக ஓட்டுநர்களை கொண்டு TN 43 W 3888, TN 43 W 6904, TN 43 X 6111, TN 43 Y 0437, TN 43 Y 8698, TN 43 W 6945, TN 43 W 6085, மற்றும் TN 43 W 6005 ஆகிய வாகனங்களை இயக்குவதற்கு தீர்மானம் எண்.2130 நாள் 27.02.2024 மற்றும் தீர்மானம் எண்.2459 நாள் 30.07.2024 ன்படி 01.01.2024 முதல் 31.12.2024 வரையிலான ஒரு வருட காலத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் டிசம்பர் 2024 முதல் ஒரு வருட காலம் முடிவடைவதால் புதிய விலைப்புள்ளி ஆனது மாவட்ட ஆட்சி தலைவரின் குறைந்த பட்ச ஊதிய சட்டம் 1948 ன் படி 2024-2025 ம் ஆண்டு விலைவிகித பட்டியலின்படி 8 தற்காலிக பணியார்களை 01.01.2025 முதல் 31.12.2025 வரையிலான ஒரு வருட காலத்திற்கு பணி செய்வதற்கு தேவையான தோராய செலவினம் ரூ. 29,70,000/- னை பொதுநிதியின் கீழ் ஊதியம் வழங்குவதற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2633 அனுமதிக்கப்பட்டது |
| 9 | கூடலூர் நகராட்சியின் 21 வார்டுகளில் சேகாரம் ஆகும் குப்பைகள், எடை போட, தனியார் டீ பேக்டரியில் (4 எண்ணிக்கை) குப்பைகள் எடை போட அனுமதிக்கப்படவில்லை எனவே கூடலூர் நகராட்சியில் 19-வார்டு-ல் ஊட்டி மெயின் ரோடு கே. கே. நகர் எடை போடும் இயந்திரம் நிறுவ இடம் உள்ளது. எனவே, எடை இயந்திரம் நிறுவ சுமார் 10.00 லட்சம் செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2634 அனுமதிக்கப்பட்டது |
| 10 | நகராட்சிகளில் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்க துறை அரசாணை எண்.1 மற்றும் பசுமை தீர்ப்பாயம் NGT (SZ) in OA No: 168/20222 (SZ) நாள். 18.02.2021 மற்றும் தமிழ்நாடு அரசு நாளிதழ் Gazette Extraordinary No/ 578, 579 நாள்.31.12.2022 மேற்காணும் அரசாணையின் படி நகராட்சியில் குடியிருப்பு சுமார் 18020 ஆகும் அரசு(ம) அரசுசார்பு நிறுவனங்கள் வணிக வளாகங்களில் உள்ள செப்டிக்டேங் வெளியேறும் கழிவுநீர் நிரம்பிய பின் முறைப்படி செப்டிக்டேங் வண்டியில் இருந்து நேரடியாக எடுக்கப்பட்ட கழிவுநீரை எவ்விதமான ஓடைப்பகுதியிலோ நீர்நிலைகளிலோ விடக்கூடாது என அரசாணை மற்றும் அரசு நாளிதழ் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி நகராட்சி பகுதிகளில் எடுக்கப்படும் (செஸ்புல் வண்டி) டேங்கில் நச்சு தொட்டியிலிருந்து எடுக்கப்படும் கழிவு நீரை மிக அருகில் உள்ள ஊட்டி நகராட்சியில் செயல்பட்டு வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையில் கழிவுநீரை முறைப்படி விடபட வேண்டி அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான கட்டணம் ரூ. 10,000/- ஆக (கூடலூர் நகராட்சியிலிருந்து நகராட்சியின் லாரியில் ஊட்டி சென்றுவர 104 கி.மி மற்றும் 1 நடைக்கு டிரைவர் ஊதியம் + 2 எண்ணிக்கை பணியாளர்களின் ஊதியம் + கழிவுநீர் வாகன தேய்மானம் ஆகியவற்றை கணக்கில் கொள்ளப்பட்டது) நிர்ணயம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. மேலும் அதற்கான கட்டணத்தை நகர்மன்றம் நிர்ணயம் செய்த தொகையினை நகராட்சியின் துணைவிதிகளில் வெளியிட்டு செயல்படுத்த சேலம் மாவட்ட அரசு நாளிதழ்களில் வெளியிட வேண்டி உள்ளது. அதற்கான ஒரு பக்கத்திற்கு உத்தேசமாக செலவு செய்து கொள்ளவும் அரசு நிறுவனத்திற்கு செலுத்த வேண்டி இருப்பதால் அத்தொகையினை செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு:<br>1. பொதுசுகாதார அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சியின் சமுதாய கழிப்பிடங்கள் கழிவுநீர் எடுக்க கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கலாம். | 2635 அனுமதிக்கப்பட்டது |
| 11 | கூடலூர் நகராட்சியில், 27வது மைல் உரக்கிடங்கில், சேகரிக்கப்பட்டு வைத்து இருக்கும் மறு சுழற்சி பயன்படுத்த முடியாத கழிவுகளை டால்மியா சிமெண்ட் பேக்டரி கொண்டு செல்ல, வாடகை லாரி ஒப்பந்தத்தில் மூலமாக கொண்டு செல்லப்பட்டு வருகிறது. கொண்டு செல்லப்படும் லாரி வாடகை குறைவாக உள்ளதாகவும் 1 நாடைக்கு கூடுதலாக ரூ.2000/- தருமாறும் கொண்டு செல்லும் வழியில் 3 எண்ணிக்கை சுங்கச்சாவடி, மற்றும் அரியலூர் டால்மியா சிமெண்ட் பேக்டரியில் லோடு இறக்க ஒரு நாள் கூடுதலாக இருக்கபட வேண்டிய சூழ் நிலையில், ஏற்கனவே கொடுக்கப்பட்ட வாடகையான ரூ. 22000/- த்துடன் ரூ.2000/- கூடுதலாக வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2636 அனுமதிக்கப்பட்டது |

12

கூடலூர் நகராட்சியின்27 வது மைல் அமைந்துள்ள உரக்கிடங்கு. இயந்திரங்கள் மற்றும் எலக்ட்ரிக் பொருட்கள் பழுதுகள் ஏற்பட்டால் உடன் சரி செய்து கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 2606 நாள். 20.10.2024 அனுமதிக்கப்பட்டத்தின் பேரில் உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் விவரங்கள்.

ஒப்புநோக்கு பட்டியல்

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விபரம் | | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|
| | | Mr. Manogaran கூடலூர் | Mr. Jeevagan கூடலூர் | Mr. Hussin கூடலூர் | |
| 1 | MCC I மற்றும் II குப்பை எரிக்கும் இயந்திரத்தின் பிலேடு, எரியூட்டும் அடுப்பு Heat கல், ஜென்செட், பேலிங் மெஷின், எலட்ரிக் பொருட்கள், ஒயர், சுட்சு, ஸ்டாடர், வெல்டிங் பணி, பீஸ் கேரியர், ஒலி விளக்கு , சிறிய கால்வாய் சரி செய்தல். | ரூ. 97,560/– | ரூ. 98,675/– | ரூ. 99,770/– | ரூ. 97,560/– |
| | | | | மொத்தம் | ரூ. 97,560/– |

குறிப்பு: குறைந்த தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்த Mr. Manogaran அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மேற்படி பணி மேற்கொள்ளலாம்.

2627 அனுமதிக்கப்பட்டது

13

கூடலூர் நகராட்சி பகுதிகளில், உள்ள தெரு நாய்களை கருத்தடை மூலமாக கட்டுபடுத்தும் விதமாக அரசு ஆணை எண்: GO (4D) No: 01 நாள்: 17.03.2023 மற்றும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் எண் 20383/2022/எச்1 நாள். 09.12.2022 தெரிவிக்கப்பட்டுள்ளது அதன் படி கூடலூர் நகராட்சியின் பகுதியில் DBC மற்றும் Animaters, Filed Assisstant மூலமாக தெருநாய்கள் 276 எண்ணிக்கையை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே Animal Husbandry and Veterinary Service. சென்னை அவர்களின் கடிதத்தில் கூடலூர் நகராட்சியின் மிக அருகிலுள்ள (மசினகுடி) Nigal NGO மூலமாக தெரு நாய்கள் பிடிக்கப்பட்டு, அதனை கருத்தடை அறுவை சிகிச்சை முடிந்த பின் உணவு கொடுத்து தங்க வைத்து (மூன்று நாட்களுக்கு) பின் தெருநாய் பிடிக்கப்பட்ட இடத்தில் விடப்பட வேண்டும் அதற்க்கு அரசு நிர்ணயம் செய்த கட்டணம் ரூ. 1450/– + 200/– மொத்தம் ரூ. 1650/– தொகையை செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

2638 அனுமதிக்கப்பட்டது

14

நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 33552/2022/EA2 – SWM – 2.0 நாள்.10.01.2023-ம் தேதி நகராட்சி பகுதிகளில் குப்பை எடுக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது அதன் பேரில் Online Tender மூலமாக திருவாளர் அட்சயா அசோசியேட்ஸ் குருப் கூடலூர் என்ற நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது அதன் படி நகர் மன்ற தீர்மானம் எண். 1711 நாள். 12.09.2023-ன் படி குப்பைகள் எடுக்கும் பணியை 01.12.2023 முதல் 31.12.2024 காலத்துடன் முடிவடைகிறது எனவே மேலும் ஒரு வருட காலம் நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

2639 ஒத்தி வைக்கப்பட்டது

15

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01 தட்டக்கொல்லி காலனி பகுதியில் படிக்கட்டு நடைபாதையுடன் கூடிய கழிவுநீர்க்கால்வாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

2640 அனுமதிக்கப்பட்டது

16

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 02 நிம்மினி வயல் மெயின்ரோடு முதல் ராஜலிங்கம் வீடு வரை சிமெண்ட் சாலை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

2641 அனுமதிக்கப்பட்டது

17

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 03 மஞ்சமூலா பகுதியில் சிமெண்ட் சாலை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 1.65 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

2642 அனுமதிக்கப்பட்டது

18

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 04 சவுண்டங்கொல்லி பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 0.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

2643 அனுமதிக்கப்பட்டது

| | Subject<br>விஷயம் | Resolution<br>தீர்மானம் |
|---|---|---|
| 19 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 05 புத்தூர்வயல் ஆதிவாசி பாடி பகுதியில் கழிவுநீர்க்கால்வாய் சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2644 அனுமதிக்கப்பட்டது |
| 20 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 06 தொரப்பள்ளி இருவயல் குறுக்கு தெரு பகுதியில் சிமெண்ட் சாலை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 1.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2645 அனுமதிக்கப்பட்டது |
| 21 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 07 ஏழுமுறம் பகுதியில் சிவபெருமாள் சௌந்தர்ராஜ் வீட்டருகில் நடைபாதையுடன் கூடிய தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 3.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2646 அனுமதிக்கப்பட்டது |
| 22 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 08 தேவர்சோலை சாலை பகுதியில் மூடியுடன் கூடிய கழிவுநீர்க்கால்வாய் சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2647 அனுமதிக்கப்பட்டது |
| 23 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 09 முத்தமிழ் நகர் பகுதியில் ராமன்குட்டி வீட்டருகில் மூடியுடன் கூடிய கால்வாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2648 அனுமதிக்கப்பட்டது |
| 24 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10 ஆடு, மாடு வதைசெய்யுமிடம் அருகாமையிலிருந்து பழைய கழிவுநீர்க்கால்வாயுடன் இணைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2649 அனுமதிக்கப்பட்டது |
| 25 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 கள்ளிக்கோட்டை சாலை இந்திராநகர் பகுதியில் ஓர்க் ஷாப் பின்புறம் சிமெண்ட் சாலை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட திட்டமதிப்பீடு தொகை ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2650 அனுமதிக்கப்பட்டது |
| 26 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 12 டாக்டர் காலனி பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2651 அனுமதிக்கப்பட்டது |
| 27 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 13 கோழிப்பாலம் பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 2.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2652 அனுமதிக்கப்பட்டது |
| 28 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14 சளிவயல் பகுதியில் சித்தி விநாயகர் கோவில் முதல் தாணிமட்டம் வரை குடிநீர் குழாய் சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 3.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2653 அனுமதிக்கப்பட்டது |
| 29 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14 சளிவயல் பகுதியில் மழைநீர் வடிகால்வாய்கள் சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 0.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2654 அனுமதிக்கப்பட்டது |
| 30 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15 செம்பாலா பகுதியில் கொங்குபார் பின்புறம் சிமெண்ட் கான்கீரிட் நடைபாதை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2655 அனுமதிக்கப்பட்டது |
| 31 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16 காசீம்வயல் பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 13.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2656 அனுமதிக்கப்பட்டது |

| | Subject<br>விஷயம் | Resolution<br>தீர்மானம் |
|---|---|---|
| 32 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 17 பகுதியில் கலைவாணி பள்ளி முதல் எஸ்.எஸ். வாட்ஜ் வரை கழிவுநீர்க்கால்வாய்க்கு மூடி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 2.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2657 அனுமதிக்கப்பட்டது |
| 33 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 18 சின்னபள்ளிவாசல் பின்புறம் சிமெண்ட் சாலை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 3.85 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2658 அனுமதிக்கப்பட்டது |
| 34 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19 ஓ.வி.எச். சாலை பகுதியில் ரவி வீடு முதல் ராமகிருஷ்ணா முதியோர் இல்லம் வரை நடைபாதையுடன் கூடிய கழிவுநீர்க்கால்வாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 4.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2659 அனுமதிக்கப்பட்டது |
| 35 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 20 ஊற்றுக்கால்வாய் பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 1.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2660 அனுமதிக்கப்பட்டது |
| 36 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21 கோக்கால் பகுதியில் மூடியுடன் கூடிய கழிவுநீர்க்கால்வாய் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2661 அனுமதிக்கப்பட்டது |
| 37 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21 கோக்கால் பகுதியில் தரைமட்ட நீர்தேக்க தொட்டியை இடித்து அகற்றும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 0.65 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2662 அனுமதிக்கப்பட்டது |
| 38 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19 சில்வர் கிளவுட் பகுதியில் செயல்பட்டு வரும் M.R.F. Center கட்டிடத்திற்கு தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 9.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 2663 அனுமதிக்கப்பட்டது |
| 39 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கோல்டன் பேக்கிரி முதல் ரவுண்ட்ஆண்டனா வரை மற்றும் பழைய நீதிமன்ற சாலை பகுதிகளுக்கு சோலார் மின் தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 18.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2664 அனுமதிக்கப்பட்டது |
| 40 | கூடலூர் நகராட்சிக்கு சொந்தமான பாரதிதாசன் கூடுதல் வணிக வளாக கட்டிடத்தில் இயங்கிவரும் கடைகளை மாதவாடகை அடிப்படையில் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகின்றனர். இந்த வணிக வளாகத்தில் மழைகாலங்களில் மேற்கூரையிலிருந்து நீர்க்கசிவு ஏற்படுவதாக தெரிவித்து மேற்படி கடைகளை நடத்தி வரும் குத்தகைதாரர்கள் வாடகை செலுத்த மறுப்பு தெரிவிக்கின்றனர். எனவே, இக்கட்டிடத்தின் மேற்கூரையிலிருந்து நீர்க்கசிவு ஏற்படுவதை தடுக்க மேற்கூரை அமைப்பது மிகவும் அவசியமாகிறது. மேலும் இப்பணியானது அவசியம் அவசரம் என்பதனால் பணியினை மேற்கொள்ள திட்ட மதிப்பீடு தொகை ரூ. 4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2665 அனுமதிக்கப்பட்டது |
| 41 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 09 –ல் கூடலூர் பஜார் கோல்டன் பேக்கரி முதல் புதிய பேருந்து நிலையம் வரை மூடியுடன் கூடிய கழிவுநீர்க்கால்வாய் அமைக்கும் பணிக்கு சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம் 2023–2024–ன் கீழ் ரூ. 95.60 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு பணி மேற்க்கொள்ளப்பட்ட நிலையில், திட்ட இயக்குநர் சிறப்பு பகுதி மேம்பாடு திட்டம், உதகமண்டலம் அவர்களின் நேரடி ஆய்வில் பணி தாமதமாக ஆரம்பித்ததன் காரணமாக இப்பணியினை நிறுத்த திட்ட இயக்குநர் அவர்களின் அறிவுரை வழங்கப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரர் கோல்டன் பேக்கிரி R.B. Fancy வரை மேற்கொள்ளப்பட்ட பணிக்கு பொதுநிதியின் கீழ் திட்ட மதிப்பீடு ரூ. 16.50 இலட்சத்திற்கு தயார்செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2666 அனுமதிக்கப்பட்டது |
| 42 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 21 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள பொது கழிப்பிடங்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2667 அனுமதிக்கப்பட்டது |
| 43 | கூடலூர் நகராட்சிக்கு சொந்தமான திருவள்ளுவர் வணிக வளாகத்தில் இயங்கிவரும் மாநில வங்கியில் மழைக்காலங்களில் கூரையில் ஏற்படும் மழைநீர் கசிவினால், வங்கிப்பணிகள் செய்வதற்கு சிரம்மாக உள்ளதாகவும், மேலும் பயனாளிகளின் பத்திரங்கள், காசோலை மற்றும் பண பரிமாற்றம் செய்யும் முக்கிய பணிகள் மேற்கொள்ளவும் சிரமம் ஏற்படுவதால் மாநில வங்கி இயங்கிவரும் கட்டிடத்திற்கு மேற்கூரை அமைக்கும் பணி அவசரம் அவசியம் என்பதால் பணியினை தயாரிக்கப்பட்ட திட்டமதிப்பீடு தொகை ரூ. 35.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2668 அனுமதிக்கப்பட்டது |

| | Subject<br>விஷயம் | Resolution<br>தீர்மானம் |
|---|---|---|
| 44 | கூடலூர் நகராட்சியானது 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டு தோரயமாக சுமார் 57000 மக்கள் தொகை கொண்ட நகரமாக திகழ்கிறது. மேலும், கோடைக்காலங்களில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்த சிக்மாயார் பகுதியிலிருந்து அம்ரூத் 2.0 திட்டத்தின் மூலம் பணியினை மேற்கொள்ள மேற்படி இடத்தினை நேராய்வு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2669 அனுமதிக்கப்பட்டது |
| 45 | இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளிலும் தெருவிளக்குகள் முற்றிலும் இல்லாத பகுதிகள் மற்றும் விடுப்பட்ட பகுதிகளில் 700 எண்ணிக்கையிலான ஏற்கனவே உள்ள மின் கம்பங்களில் மின் கம்பிகளுடன் கூடிய புதிய தெருவிளக்குகள் அமைக்கவும். மேலும் 50 எண்ணிக்கையிலான புதிய மின் கம்பங்களுடன் கூடிய தெருவிளக்குகள் அமைக்கவும் நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம். | 2670 அனுமதிக்கப்பட்டது |

தலைவர்

கூடலூர் நகராட்சி (நீலகிரி)